**செய்தி வெளியீடு எண்–964** **நாள்– 7.11.2008**

<u>செய்தி வெளியீடு</u>

<u>மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத்துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களுடன் மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் புதுடெல்லியில் சந்திப்பு.</u>

மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ராஜா அவர்களுடன் இன்று (07.11.2008) காலை 10.30 மணிக்கு புது டெல்லியிலுள்ள க்ரிஷி பவனில் மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களை சந்தித்தார்கள். மத்திய அரசு உணவுத்துறை செயலாளர் திருமதி, அல்கா சிரோஉறி அவர்களும் தமிழ்நாடு உணவுத்துறை செயலாளர் திரு. சண்முகம் அவர்களும் உடனிருந்தனர்.

2. தமிழ் நாட்டில் அரிசியின் விலை வெளிச்சந்தையில் அதிகரித்து வருவதால் பொது விநியோகத் திட்டத்திலும் அரிசியின் நுகர்வு அதிகரித்து வருகிறது என்றும், எனவே மத்திய தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் மாண்புமிகு மத்திய அமைச்சரிடம் தமிழக உணவுத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் வலியுறுத்தினார். மத்திய அரசின் ஆணையினை எதிர்நோக்கி தமிழக அரசு 20 சதவீத ஈரப்பதமுடைய நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதி வழங்கியுள்ளது என்பதை தெரிவித்து, உடனடியாக இதற்கு பின்னேற்பு வழங்கவும் கோரினார்கள்.

3. மேலும் நெல்கொள் முதலை தமிழ்நாட்டில் அதிகரிக்க மாநில அரசு எடுத்துவரும் முயற்சிகள் பற்றியும், மத்திய அரசு வழங்கும் ஆதார விலையைவிட

சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.120 ம் சாதாரக நெல்லுக்கு ரூ.100 ம் கூடுதலாக மாநில அரசு நிதியிலிருந்து வழங்கி வருகிறது என்றும் தெரிவித்தார். சென்ற ஆண்டு குறுவையில் பயிர் இழப்பு ஏற்பட்டதால் கொள்முதல் செய்யப்படவில்லை என்றாலும் நடப்பு ஆண்டு மாநில அரசு கூடுதல் கொள்முதல் விலை வழங்குவதால் இதுவரை 2.50 லட்சம் டன் நெல் குறுவை பருவத்திலேயே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே கூடுதல் அரிசி தமிழ் நாட்டுக்கு ஒதுக்கிடு செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

4. மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்கள் மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் 36 லட்சம் டன் அரிசி வழங்கப்படுகிறது என்றும் இதில் இந்த ஆண்டு தமிழ்நாட்டிலேயே, கொள்முதல் செய்ய மத்திய அரசு 13 லட்சம் டன் அரிசி இலக்கு நிர்ணைக்கப்பட்டுள்ளது என்றும் இதற்கு மேல் கூடுதலாக தமிழ்நாடு கொள்முதல் செய்து கூடுதலாக தேவைப்படும் அரிசியை ஈடு செய்துகொள்ள மத்திய அரசு அனுமதி அளிக்கும் எனவும் உறுதியளித்தார். மேலும் தற்போது கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு 20 சதவீதம் ஈரப்பதம் வரை மத்திய அரசு அனுமதியளிக்கும் என்றும் மேலும் உறுதியளித்தார்.

********

**வெளியீடு–இயக்குநர், செய்தி மககள் தொடர்புத்துறை, சென்னை–9.**